**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.108/2026**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **அனுப்செல்வின்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **செல்வன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(29.05.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் மெடிக்கல் நிறுவனத்தில் மேனேஜராக வேலை செய்து வருகிறேன். நானும் எதிரியும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 02.10.2025 அன்று மதியம் 3 மணிக்கு திருமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகே சாப்பிட அமர்ந்திருந்த போது அங்கு அடையளாம் தெரியாத நபர் என்னையும் எனது அண்ணன் விஜயையும் அசிங்கமாக பேசி சண்டை போட்டார். சண்டை போட்டதில் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். பின்னர் அடையாளம் தெரியாத நபர்கள் அங்கு இருந்து சென்றுவிட்டார்கள். எங்களுக்கு சிறு காயம் இருந்ததால் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். சிகிச்சையில் இருந்த போது **சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி மீது நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**. இல்லை

**மறுவிசாரணை**.இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.108/2026**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **விஜய்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **செல்வம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(29.05.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஒப்பந்தக்காரராக வேலை செய்து வருகிறேன். நானும் எதிரியும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நானும் அ.சா.1ம் கடந்த 02.10.2025 அன்று மதியம் 3 மணிக்கு திருமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகே சாப்பிட அமர்ந்திருந்த போது அங்கு அடையளாம் தெரியாத நபர் என்னையும் அ.சா.1யும் அசிங்கமாக பேசி சண்டை போட்டார். சண்டை போட்டதில் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். பின்னர் அடையாளம் தெரியாத நபர்கள் அங்கு இருந்து சென்றுவிட்டார்கள். எங்களுக்கு சிறு காயம் இருந்ததால் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். சிகிச்சையில் இருந்த போது அ.சா.1 புகார் கொடுத்தார். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**. இல்லை

**மறுவிசாரணை**.இல்லை